**உள்ளடக்கம்**


**01.** அறிமுகம்

1.1 நோக்கு

1.2 குறிக்கோள்

1.3 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பிரதான நோக்கங்கள்

1.4 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயல்பங்கு

02. நிறுவனக் கட்டமைப்பு

03. மனிதவள முகாமைத்துவம்

3.1 பணியாட் தொகுதி கட்டமைப்பு

3.2 இடமாற்றங்கள் தொடர்பான விடயங்கள்

3.3 தாபன நடவடிக்கைகள்

3.4 மனிதவள அபிவிருத்தி

04. நிதிமுகாமைத்துவம்

4.1 செலவு மதிப்பீடு -2015

4.2 பௌதீகவளங்கள் முகாமைத்துவம் -2015

05. அபிவருத்தி நடவடிக்கைகள்

5.1 பிரதேசகாணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் திட்டங்களை அமுலாக்கல்

5.2 மாவட்டகாணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

5.3 பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

5.4 தேசியகாணிப் பயன்பாடுபற்றிய ஆய்வு

5.5 நீர்மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களைப் அடையாளங்காணல்

5.6 வீடமைப்புக்கு பொருத்தமான இடங்களை அடையாளங்காணல்

5.7 கிராமமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை அமுலாக்கம்

5.8 காணித்துண்டு மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை விளக்கம்

5.9 தரம ிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம்

5.10 பாடசாலைப் பிள்ளைகளுக்கும், சமூகத்திற்கும் விழிப்புணர்வுத் திட்டம்

5.11 விசேட திட்டங்கள்

5.12 காணிப்பயன்பாட்டு தகவல் முறைமையை பராமரித்தல்

5.13 ஏனைய திட்டங்கள்

5.14 வருடாந்த வேலைத்திட்டம் பற்றிய கருத்தரங்கு

5.15 மாவட்ட மட்டத்தில் திட்டங்களின் முன்னேற்றம்

# காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

## 01.அறிமுகம்

“காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடற் பிரிவு”காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஒருபிரிவாக, இந்நாட்டிற்கு விஞ்ஞானரீதியிலான காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலை அறிமுகப்படுத்தும் நோக்கில் 1983ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் விடயத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டும், பிரிவின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதனாலும்; 2010ம் ஆண்டில் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டது.

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் (கா.ப.கொ.தி.தி) தலைமை அலுவலகம் நாரஹென்பிட்டியில் அமைந்துள்ளது. இதன்கீழ் 25 மாவட்ட அலுவலகங்கள் இயங்குகின்றன. மாவட்ட அலுவலகங்களிற்கு பொறுப்பாளர்களாக மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் 1988ம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். அறுபத்தியிரண்டு உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் 1994 மற்றும் 1999ம் ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பின்னர் பிரதேச செயலகமட்டத்தில் 269 காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் 2005ம்ஆண்டு சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மேலும் வெளிக்கள செயற்பாடுகளை விரிவுபடுத்து வதற்காக பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளும் திட்டத்தின் கீழ் 176 அபிவிருத்தி உத்தியோகத்தாகள் 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 2015.மார்ச் 31ம் திகதி முதல் மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் தகுதியின் அடிப்படையில் உதவிப்பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) ஆக நியனம் பெற்றார்கள். தலைமை அலுவலகத்தில் உதவிப் பணிப்பாளர் (விவசாய பொருளியல்) பதவி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிபரீட்சைமூலம் 2015 மே 15ம் திகதி முதல் நிரப்பப்பட்டது. முன்னைய உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் மற்றும் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர் பதவிகள் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் என ஒருபதவியாக பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

### 1.1 நோக்கு

இலங்கையின் நிலவளங்களை மிகச் சிறப்பாகவும் வளங்குண்றாத நிலையிலும் பயன்படுத்தல்.

### 1.2 குறிக்கோள்

நிலவளத்தை மிகச்சிறப்பாகப் பயன்படுத்தலை நிறைவேற்றுவதற்காகவும் எமது பங்காளர்களையும் நிலப் பாவனையாளர்களையும் திருப்திப்படுத்துவதற்காகவும் சாமர்த்தியமும் பொறுப்புணர்வுமுள்ள பணியாளர்களால் கொள்கைகளை வகுத்தல், திட்டங்களை உருவாக்குதலுடன் வளங்குன்றாத நிலையினையும் சூழற்சமநிலையையும் பேணுதலுமாகும்.

### 1.3 கா.ப.கொ.தி.தி. இன்பிரதான நோக்கங்கள்

1. இலங்கைக்கான தேசிய காணி உபயோகக் கொள்கைகளை அமுல்ப்படுத்தத் தேவையான சட்டப்பின்னணியை உருவாக்கல்.
2. இலங்கைக்கான தேசிய காணிப்பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.
3. மட்டுப்படுத்தப்பட்ட வளமான நிலவளத்தை மனிதமேம்பாட்டிற்காக சுற்றாடல் சமநிலையை பேணும்வகையில் பயன்படுத்தக்கூடியவாறு பொருத்தமான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்கல்.
4. நிலத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின்போது நிலவளத்தின் பாதுகாப்பும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையும் உறுதிப்படுத்துமாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய சிபாரிசுகளையும் பணிப்புரைகளையும் வழங்கல்.
5. விஞ்ஞானரீதியிலான காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பில் அறிவு, ஆற்றல், பயிற்சி என்பன விஸ்தரிக்கப்படுமாறு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்தல்.

### 1.4 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயல்பங்கு

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் செயற்பாடுகள் இரு மட்டங்களிலாகும்.

(அ) பேரளவுமட்டம் (Macro Level)

இம்மட்டத்தில் மாகாண மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு காணிப்பயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும். எல்லா மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு காணிப்பயன்பாட்டு திட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், வடக்கு கிழக்கு மாவட்ட ங்களில் கற்றுணர்ந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (எல்.எல்.ஆர்.சி) அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரையை அமுலாக்கும் வகையில் மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டம் உருவாக்கப்படுவதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நுண்மட்டம் (Micro Level)

இம் மட்டத்தில் பிரதான செயற்பாடுகள்

:

(1) கிராம மட்டத்திலான காணிப்பயன்பாட்டு திட்டமிடலை செய்வது எவ்வாறென செய்துகாட்டுதல்.
(2) தரமிழக்கப்பட்ட நிலங்களை புனரமைப்பதற்கான திட்டங்களை தயாரித்தல்.

(3) அரச அலுவலகவளவில் மற்றும் பாடசாலைகளிலுள்ள வெற்றுக் காணிகளில் திறமையான காணிப்பயன்பாடு பற்றிய செய்துகாட்டல்.
(4) அரச நிறுவனங்களின் வேண்டுகோளிற்கிணங்க பயன்படுத்தப்படாத காணிகளில் காணிப்பொருத்தப்பாடு பற்றிய கற்கைகளை மேற்கொள்ளல்.

மேலுள்ள காணிப்பயன்பாட்டு திட்டமிடற் செயற்பாடுகளிற்கு பின்வரும் செயற்பாடுகள் ஆதரவளிக்கும்.

1. காணிப்பயன்பாட்டு தகவல் முறைமை ஒன்றை பராமரித்தல்.
.
2. மாவட்ட மட்டத்திலான காணிப்பயன்பாட்டு வரைபடங்களை இற்றைப்படுத்தல்.

3. காணிகளை பயன்படுத்துவோர் காணிசம்பந்தப்பட்ட அரசஉத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நன்மைக்காக விழிப்புணர்வு கூட்டங்களை நடாத்துதல்.

4. மாவட்ட, பிரதேச மட்டத்தில் காலத்திற்குகாலம் முன்வைக்கப்படும் காணிப்பயன்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக காணிப்பயன்பாட்டு திட்டமிடற்குழு கூட்டங்களை மாவட்ட பிரதேசமட்டத்தில் ஏற்பாடுசெய்தல்.

# 3. மனித வள முகாமைத்துவம்

## 3.1 பணியாட் தொகுதி கட்டமைப்பு

| தொ. இல. | அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதி | பதவிகளின் எண்ணிக்கை | முந்திய வருடத்தில்எண்ணிக்கை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் -2014 | | | | | நடப்புவருடத்தில்எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஓய்வு பெற்ற | இடமாற்றம் | | ஆட் சேர்ப்பு | பதவி உயர்வு | |
| | | | | | சென்ற | வந்த | | | |
| 01 | பணிப்பாளர்நாயகம் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 02 | பணிப்பாளர்(நிருவாகம்) | 01 | - | - | - | - | - | - | - |
| 03 | பிரதிப்பணிப்பாளர்(நிருவாகம்) | 01 | - | - | - | - | - | - | 01 |
| 04 | பிரதிப்பணிப்பாளர்(கா.ப.தி) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 05 | கணக்காளர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 06 | உள்ளககணக்காய்வாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 07 | உதவிப்பணிப்பாளர் (மனிதவளஅபிவிருத்தி) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 08 | உதவிப்பணிப்பாளர் (தகவல்முறைமை) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 09 | உதவிப்பணிப்பாளர் (சமூகவியல்) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 10 | உதவிப்பணிப்பாளர் (பயிராக்கவியல்) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 11 | உதவிப்பணிப்பாளர் (விவசாயப்பொருளாதாரம்) | 01 | - | - | - | - | - | - | 01 |
| 12 | உதவிப்பணிப்பாளர்(கா.ப.தி) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 13 | கணிணி முறைமைப் பகுப்பாளர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 14 | உதவிப்பணிப்பாளர்(கா.ப.தி) | 25 | 15 | 01 | - | - | - | 01 | 13 |
| 15 | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர், | 294 | 294 | - | - | - | - | - | 294 |
| 16 | அரசமுகாமைத்துவ உதவியாளர் (விசேடதரம்) | 01 | - | - | - | - | - | - | - |
| 17 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 200 | 172 | - | 01 | 22 | - | - | 193 |
| 18 | வரவு செலவுத்திட்ட உதவியாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 19 | அரசமுகாமைத்துவ உதவியாளர் | 50 | 24 | - | 05 | 09 | - | - | 28 |
| 20 | தகவல்தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 02 | - | - | - | - | - | 02 |
| 21 | சாரதி | 29 | 13 | - | 01 | 03 | 14 | - | 29 |
| 22 | அலுவலகஉதவியாளர் | 37 | 29 | - | 01 | - | 08 | - | 36 |
| 23 | வரைபடவினைஞர் | 25 | 19 | - | - | - | - | - | 19 |
| 24 | முகாமைத்துவஉதவியாளர் (தொழில்நுட்பம்அல்லாத) | - | - | - | - | - | 11 | - | 11 |
| | **மொத்தம்** | 677 | 577 | 01 | 08 | 34 | 33 | 01 | 635 |

## 3.2 இடமாற்றம்

| இல. | பெயர் மற்றும் பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற | | இடமாற்றம்பெற்றுவந்த | | |
|---|---|---|---|---|---|---|
| | | திகதி | இடமாற்றலாகி சென்ற இடம் | பின்வருநர் பெயர் | திகதி | இடமாற்ற பெற்ற இடம் |
| 01 | திருமதி.டி.சி.என். பிரியந்தி (தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர்) | 2015.02.02 | மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் | திரு.டிபிள்யு.சி.ஜே. பொன்சேகா (தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர்) | 2015.03.12 | மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் |
| 02 | திருமதி.டபிள்யு.ஜி. புண்ணியலதா (தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர்) | 2015.02.02 | மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் | திருமதி.பி.வி.ஏ. பிரேமலதா (தகவல் தொடர்பு தொழில் நுட்ப உதவியாளர்) | 2015.02.05 | மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் |
| 03 | திரு.பிரசாத்சிங்க (அரச முகாமைத்துவ உதவியாளர்) | 2015.02.05 | பிரதி காணி ஆணையாளர் திணைக்களம் | திரு.ஏ.எல்.திரங்கம (அரசமுகாமைத்துவஉதவியாளர்) | 2015.02.10 | பிரதி காணி ஆணையாளர் திணைக்களம் |
| 04 | திருமதி.டி.எம்.நந்தாவதி; (அ.மு.உ.) | 2015.02.02 | மாவட்ட செயலகம் மொனராகலை | திருமதி.கே.எம்.எச்.ஜி. பண்டார(அ.மு.உ.) | 2015.02.02 | மாவட்ட செயலகம் மொனராகலை |
| 05 | திரு.ஐ.ஏ.கே.டி. இரத்தினாயக்க (அ.மு.உ.) | 2015.02.23 | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம். | - | - | - |
| 06 | | - | - | திரு.யு.கே.கே.எச். விஜய பண்டார (அ.மு.உ.) | 2015.02.16 | சிரேஸ்ட அமைச்சர் செயலகம் |
| 07 | | - | - | திரு.ஏ.ஏ.ஆர்.எச். அமரசிங்க (சாரதி) | 2015.02.09 | சிரேஸ்ட அமைச்சர் செயலகம் |
| 08 | | - | - | திரு.எஸ்.டபிள்யு. விக்கிரமசிங்க (சாரதி) | 2015.04.06 | பொது நிருவாக அமைச்சு |
| 09 | திரு.எஸ.எஸ.கிங்ஸ்லி (அ.மு.உ.) | 2015.06.01 | ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் | - | - | - |
| 10 | திரு.ஏ.பி.ஏ.ராஸபக்ஸ (சாரதி) | 2015.07.02 | நிதி அமைச்சு | - | - | - |
| 11 | திரு.ஏ.எஸ்.எம்.டி.ஆர். ஜயவீர (அலுவலக உதவியாளர்) | 2015.10.01 | விளையாட்டுத் துறை அமைச்சு | - | - | - |
| 12 | திரு.ஏ.எல்.திரங்கம (அ.மு.உ.) | 2015.10.20 | பி.செயலகம் அரநாயக்க | - | - | - |
| 13 | திருடி.எச.பி.ஐ.என். சில்வா | 2015.02.09 | கமநலசேவை அபிவிருத்தி திணைக்களம் | | | |
| 14 | | | | திரு.பி.ஜி.ரி.எஸ். குமார (அ.உ) | 2015.02.19 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | - | - | - | திரு.ஈ.எம்.யு.ஜி.ஆர்.மே. எக்கநாயக்க (அ.உ.) | 2015.02.25 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 16 | - | - | - | திருமதி.ஏ.லோகவதனி (அ.உ.) | 2015.03.04 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 17 | - | - | - | திரு.பிஜீ.எஸ்.எஸ்.கே .ரன்ஜித் (அ.உ) | 2015.03.08 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 18 | - | - | - | செல்வி.மே.எம்.என். பிரியந்தி (அ.உ) | 2015.03.12 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 19 | - | - | - | திரு.எச்ஏ.ரி.சம்பத் (அ.உ) | 2015.03.19 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 20 | - | - | - | செல்வி.ஆர்.எம்.ஆர்.ரத் நாயக (அ.உ) | 2015.03.23 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 21 | - | - | - | செல்வி.எச்.பி.சி.டி. சிறீமாலி (அ.உ) | 2015.03.24 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 22 | - | - | - | திரு.பி.எம்.எஸ்.ஆர். வீரசிங்க (அ.உ) | 2015.04.01 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 23 | - | - | - | திரு.ஆh.எம்.டபி..யு. ரத்நாயக (அ.உ) | 2015.04.01 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 24 | - | - | - | திரு.ஏ.ரி.சம்பத் (அ.உ) | 2015.04.22 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 25 | - | - | - | திருமதி.ஏ.ஜி.பத்மலதா (அ.உ) | 2015.05.07 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் |
| 26 | | | | திரு.எஸ்.அருட்செல்வம் (அ.உ) | 2015.06.01 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் |
| 27 | | | | திருமதி.ஏ.ஜே. ஜெவினா உம்மா (அ.உ) | 2015.06.01 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் |
| 28 | | | | திருமதி.எஸ்.கிருஷ்ன சிந்து (அ.உ) | 2015.06.01 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 29 | - | - | - | திரு.ஏ.விஜிகரன் (அ.உ) | 2015.06.02 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் |
| 30 | - | - | - | திரு.ரி.பிரதீபன் (அ.உ) | 2015.06.02 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் |
| 31 | - | - | - | திரு.ஆர்.எம்.சி.கே.ரத்நா யக (அ.உ) | 2015.06.02 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 32 | - | - | - | திரு.ஏ.எம்.ஏ.பி.அத்நாயக (அ.உ) | 2015.06.10 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |
| 33 | - | - | - | திருமதி.டபி.டி.ஐ.பி.திஸ நாயக (அ.உ) | 2015.06.17 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| 34 | - | - | - | திருமதி.ஜி.எச்.எஸ.ஏ. ரணசிங்க (அ.உ) | 2015.07.02 | ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் |
| 35 | - | - | - | திரு.வி.சிறீதரன் (அ.உ) | 2015.07.02 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் |
| 36 | - | - | - | திரு.ஜி.டபி.பிரசன்ன (அ.உ) | 2015.07.02 | வீடமைப்பு சமூர்த்தி அமைச்சு |

## 3.3 தாபன நடவடிக்கைகள்

| தொடர் இல. | விபரங்கள் | கடந்தவருடம் (2014) | | | நடப்புவருடம் (2015) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | மிகுதி | பெறப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | மிகுதி |
| 01 | ஆட்சேர்ப்பு | 176 | 200 | 24 | 09 | - | - |
| 02 | நடத்தப்பட்டபரீட்சைகள் | - | - | - | 03 | - | - |
| 03 | நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் | - | - | - | 04 | - | - |
| 04 | பதவி நிரந்தரமாக்கப்பட்டவை | - | - | - | 03 | - | - |
| 05 | பதவி உயர்வுகள் | 04 | 04 | - | 01 | - | - |
| 06 | சம்பள உயர்வு செலுத்தியவை | முழுவதும் | முழுவதும் | - | முழுவதும் | முழுவதும் | - |
| 07 | சேவைநீடிப்பு | - | - | - | - | - | - |
| 08 | ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டவை | - | - | - | - | - | - |
| 09 | பதவிவெறிதாக்கல் | - | - | 01 | 01 | - | - |
| 10 | தடையுத்தரவு | - | - | - | - | - | - |
| 11 | மீளச்சேர்த்தல் | - | - | - | - | - | - |
| 12 | ஒழுங்கு விசாரணைகள் | - | - | - | - | - | - |
| 13 | வெளிநாடு செல்லலீவு | - | - | - | 13 | - | - |
| 14 | வெளிநாட்டு புலைமைப்பரிசில் | - | - | - | 07 | - | - |
| 15 | மந்திரிசபை குறிப்பு | - | - | - | - | - | - |
| 16 | கையெழுத்திட்ட பிணைகள் | - | - | - | - | இல்லை | - |
| 17 | விடுதலையான பிணைகள் | - | - | - | - | இல்லை | - |
| 18 | அனுமதிக்கப்பட்ட கடன் (இடர்) | 193 | 193 | - | 151 | 151 | - |
| 19 | சொத்து | 100 | 100 | - | 09 | 09 | - |
| 20 | வாகனங்கள் | - | - | - | - | - | - |
| 21 | ஏனையவை | 93 | 93 | - | 142 | 142 | - |
| 22 | விடுவிக்கப்பட்டது | - | - | - | 05 | - | - |

## 3.4 மனிதவளஅபிவிருத்தி

### வெளிநாட்டுப்பயிற்சி

| தொடர் இல- | பயிற்சிநெறி | பெயர் | பதவி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | அளவீடு மற்றும் வரைபடம் உருவாக்கும் நிறுவனத்தின் திறன் விருத்திசெய்தல் | திருமதி.ஆர்.எம்.ஆர்.டி.கருணாரத்ன | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | கொரியா | ஏப்ரல் 18 தொடக்கம் மே 10 வரை |
| 02 | காணிக்கொள்கை மற்றும் திட்டமிடல் அபிவிருத்தி | திரு..டபிள்யு.எம்.வணசிங்க | உதவிப் பணிப்பாளர் | கொரியா | யூன் 25 தொடக்கம் யூலை 15 வரை |
| 03 | உயர் ஆங்கில சாண்றிதழ் பயிற்சிநெறி மற்றும் தகவல் தொழில் நுட்பம் மேம்படுத்தல் | திரு.டபிள்யு.ஏ.மனுகசம்பத் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | இந்தியா | யூலை 8 தொடக்கம் செப்ரம்பர் 10 வரை |
| 04 | ஜப்பானின் நன்கொடையில் மனிதவள அபிவிருத்தி | திரு.பி.ஜி.எஸ்.கருணாரத்ன | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | ஜப்பான் | 2015 ஆகஸ்ட் 16 தொடக்கம் 2017 ஆகஸ்ட் 16 வரை |
| 05 | உயர் ஆங்கில சாண்றிதழ் பயிற்சிநெறி மற்றும் தகவல் தொழில் நுட்பம் மேம்படுத்தல் | திரு.மே.டி.நிலந்த | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | இந்தியா | ஒக்டோபர் 6 தொடக்கம் டிசெம்பர் 3 வரை |
| 06 | அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு காணிப்பயன்பாட்டு திட்டமிடல் | திரு.ஐ.எல்.மொகமட்ஸாகீர் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | சீனா | ஒக்டோபர் 14 தொடக்கம் நவம்பர் 3 வரை |
| 07 | அவுஸ்திரேலியாவின் காணி நிர்வாக அனுபவத்தை பரிமாறல் | திருமதி.பி.எம்.சாந்தி பெர்னாந்து | பணிப்பாளர் நாயகம் | அவுஸ்திரேலியா | ஒக்டோபர் 19 தொடக்கம் நவம்பர் 13 வரை |

### உள்நாட்டுப்பயிற்சி

| இல. | பயிற்சித் திட்டம் | அலுவலர்கள் எண்ணிக்கை | அலுவலர்கள் | நிறுவனம் | கால அளவு |
|---|---|---|---|---|---|
| 01 | புவியியல் தகவல் முறைமையை (ஜீ.ஐ.எஸ்) பாவித்து வரைபடம் உருவாக்குதல் பயிற்சி | 05 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள் | ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் | 01 நாள் |
| 02 | வெளிக்கள ஆய்வு | 36 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | கேகாலை மாவட்ட அலுவலகம் | 02 நாட்கள் |

| இல. | பயிற்சித்திட்டம் | அலுவலர்கள் எண்ணிக்கை | அலுவலர்கள் | நிறுவனம் | கால அளவு |
|---|---|---|---|---|---|
| 03 | அலுவலக உதவியாளர் களின் பொறுப்புக்கள் | 02 | அலுவலக உதவியாளர்கள் | திறமைகள்; அபிவிருத்தி நிதியம் லிமிடெட் | 02 நாட்கள் |
| 04 | அலுவலக முகாமைத்துவ முறைமைகள் | 61 | உதவிப் பணிப்பாளர், முகாமைத்துவ உதவியாளர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தகவல் தொழில் நுட்ப உதவியாளர்கள் | தலைமை அலுவலகம் | 01 நாள் |
| 05 | வெளிக்களப் பயிற்சி | 37 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், | அம்பாறை மாவட்ட அலுவலகம் | 03 நாட்கள் |
| 06 | ஜீ.ஐ.எஸ் பயிற்சி | 13 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பொலனறுவை மாவட்ட அலுவலகம் | 02 நாட்கள் |
| 07 | ஜீ.ஐ.எஸ் குறுகிய பாடநெறி | 06 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பேராதனைப் பல்கலைக்கழகம் | 06 நாட்கள் |
| 08 | காணிப்பயன்பாடு வரைபடம் இற்றைப்படுத்தல் | 25 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பதுளை மாவட்ட அலுவலகம் | 02 நாட்கள் |
| 09 | ஜீ.ஐ.எஸ் பயிற்சி | 21 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | மொனராகலை மாவட்ட அலுவலகம் | 02 நாட்கள் |
| 10 | அடிப்படை காணிச்சட்டம் | 57 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | மாத்தளை மாவட்ட அலுவலகம் ஏற்பாடு | 01 நாள் |

| இல. | பயிற்சித்திட்டம் | அலுவலர்கள் எண்ணிக்கை | அலுவலர்கள் | நிறுவனம் | கால அளவு |
|---|---|---|---|---|---|
| 11 | சம்பளம் தயாரித்தல் பற்றிய பயிற்சி | 50 | உதவிப் பணிப்பாளர், முகாமைத்துவ உதவியாளர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தகவல் தொழில் நுட்ப உதவியாளர்கள் | தலைமை அலுவலகம் | 01 நாள் |
| 12 | ஜீ.ஐ.எஸ் குறுகிய பாடநெறி | 18 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பேராதனைப் பல்கலைக்கழகம் | 06 நாட்கள் |
| 13 | சாரதிகளுக்கான பயிற்சி | 35 | சாரதிகள் | தலைமை அலுவலகம் | 01 நாள் |
| 14 | ஜீ.ஐ.எஸ் குறுகிய பாடநெறி | 05 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பேராதனைப் பல்கலைக்கழகம் | 06 நாட்கள் |
| 15 | தேசிய காணிப்பயன்பாடு பற்றிய ஆய்வு வெளிக்களப் பயிற்சி | 25 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | அம்பாறை மாவட்ட அலுவலகம் | 02 நாட்கள் |
| 16 | ஜீ.ஐ.எஸ் மற்றும் ரிமோட் சென்சங் டிப்ளோமா பாடநெறி | 05 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 06 மாதங்கள் |
| 17 | பட்டப் பின்படிப்பு (சமூகவியல்) | 01 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | களனி பல்கலைக்கழகம் | 2 வருடங்கள் |
| 18 | சாண்றிதழ் பாடநெறி (உற்பத்தித்திறன்) | 04 | முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், | தேசிய உற்பத்தித்திறன்; செயலகம் | 04 மாதங்கள் |
| 19 | பசுமையான உற்பத்தித்திறன் | 04 | பிரதிப் பணிப்பாளர் முகாமைத்துவ உதவியாளர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், | தேசிய உற்பத்தித்திறன்; செயலகம் | 01 நாள் |
| 20 | பசுமையான உற்பத்தித்திறன் | 03 | முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், | தேசிய உற்பத்தித் திறன்; செயலகம் | 01 நாள் |
| 21 | குறைந்த வளங் களுடன் உயர் மதிப்பான சேவை முகாமைத்துவம் | 04 | முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், | | 01 நாள் |
| 22 | பட்டப் பின்படிப்பு | 04 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், | களனி,பேராதனை பல்கலைக்கழகம் | 01 வருடம் |
| 23 | அரச துறைக்கான மின் கற்றல் | 02 | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், | தேசிய உற்பத்தித் திறன்; செயலகம் | 01 நாள் |

# 04 நிதி முகாமைத்துவம்

## 4.1 செலவு மதிப்பீடு -2015

| தொடர்இல- | முந்தியவருடம் (2014) | | | செலவு நூற்று வீதம் | நடப்புவருடம் (2015) | | | செலவு நூற்று வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு | | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு | |
| 1.கருத்திட்டம் 1 | 223,763,329 | 217,467,608 | 6,295,722 | 97.19 | 282,392,938 | 281,652,192 | 740,746 | 99.74 |
| வேதனங்கள்மற்றும் ஊதியங்கள் | 36,556,671 | 35,358,410 | 1,198,261 | 96.72 | 40,574,062 | 39,013,938 | 1,560,124 | 96.15 |
| ஏனைய மீண்டெழும் | - | - | - | - | - | - | - | - |
| மூலதனம் | 9,000,000 | 7,955,110 | 1,044,890 | 88.39 | 20,000,000 | 18,611,099 | 1,388,901 | 93.06 |
| 2001 | 1,800,000 | 1,114,426 | 685,574 | 61.91 | 1,800,000 | 528,103 | 1,271,897 | 29.34 |
| 2002 | 4,850,000 | 4,841,454 | 8,546 | 99.82 | 4,200,000 | 2,718,049 | 1,481,951 | 64.72 |
| 2003 | - | - | - | - | - | - | - | - |
| 2101 | - | - | - | - | - | - | - | - |
| 1.கருத்திட்டம் 1 | - | - | - | - | - | - | - | - |
| வேதனங்கள்மற்றும் ஊதியங்கள் | - | - | - | - | - | - | - | - |
| ஏனைய மீண்டெழும் | - | - | - | - | - | - | - | - |
| மூலதனம் | - | - | - | - | - | - | - | - |
| 2001 | - | - | - | - | - | - | - | - |
| 2002 | - | - | - | - | - | - | - | - |
| 2003 | - | - | - | - | - | - | - | - |
| 2101 | **275,970,000** | **266,737,008** | **9,232,992** | **96.65** | **348,967,000** | **342,523,381** | **6,443619** | **98.15** |
| மொத்தம் | | | | | | | | |

அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பனம் B கணக்கு

| எல்லைகள் | முந்தியவருடம் (2014) | | நடப்புவருடம் (2015) | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு | சரியான | மதிப்பீடு | சரியான |
| செலவுஅதிகபட்சஎல்லைகள் | 15,000,000 | 14,723,409 | 20,920,000 | 20,905,917 |
| கடன்நிலுவை குறைந்தபட்ச எல்லைகள் | 7,000,000 | 9,938,848 | 10,920,000 | 15,029,000 |
| பற்றுநிலுவை அதிகபட்ச எல்லைகள் | 50,000,000 | 47,974,425 | 65,000,000 | 55,149,226 |

## 4.2 பௌதீகவளங்கள் முகாமைத்துவம் -2015

**அசையும்சொத்துக்கள்**

| தொடர் இல. | சொத்துவகை | வருட ஆரம்ப நிலை | வருடத்தில்ஏற்பட்டமாற்றங்கள் | | | | வருட இறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கையகப் படுத்தல் | கொள்வனவு | ஏலவிற்ப னை | அகற்றுதல் | |
| 1 | பாரவாகனங்கள் | - | - | - | - | - | - |
| 2 | கெப்வண்டி | 18 | - | 02 | - | - | 20 |
| 3 | மோட்டார்வாகனம் | 01 | - | - | - | - | 01 |
| 4 | வான் | 01 | 02 | - | - | - | 03 |
| 5 | ஜீப் | 12 | - | - | - | - | 12 |
| 6 | மோட்டார்சைக்கிள் | - | - | - | - | - | - |
| 7 | சைக்கிள் | 01 | - | - | - | - | 01 |
| 8 | பிரதிஎடுக்கும் இயந்திரம் | 01 | - | - | - | - | 01 |
| 9 | நிழல் பிரதிஎடுக்கும் இயந்திரம் | 32 | - | 01 | 02 | - | 31 |
| 10 | கணிணி | 156 | - | 21 | - | 04 | 173 |
| 11 | கணிணி அச்சு இயந்திரம் | 46 | - | 06 | 04 | - | 48 |
| 12 | லப்ரொப் கணிணி | 60 | - | 02 | - | - | 62 |
| 13 | தொலைநகல் இயந்திரம் | 30 | - | 07 | 04 | 01 | 32 |
| 14 | தட்டச்சு இயந்திரம் (கைமுறை) | - | - | - | - | - | - |
| 15 | தட்டச்சு இயந்திரம் (மின்) | - | - | - | - | - | - |
| 16 | பணக்காப்புப் பெட்டி | 01 | - | - | - | - | 01 |
| 17 | கமரா | 26 | - | - | 01 | - | 25 |
| 18 | வீடியோ கமரா | - | - | - | - | - | - |
| 19 | தொலைக்காட்சிப் பெட்டி | 03 | - | - | 01 | - | 02 |
| 20 | வானொலிப் பெட்டி | - | - | - | - | - | - |
| 21 | குளிர்சாதனப்பெட்டி | 01 | - | - | - | - | 01 |
| 22 | கணிணி அச்சு இயந்திரம்(கலர்) | 22 | - | 02 | - | - | 24 |
| 23 | ஸ்கேன்இயந்திரம் | 27 | - | | - | - | 27 |
| 24 | மல்ரிமீடியா உபகரணங்கள் | 30 | - | 01 | 01 | - | 30 |
| 25 | ஜீ.பி.எஸ் உபகரணங்கள் | 94 | 02 | 20 | 03 | - | 113 |
| 26 | இணையத்தள வசதிகள் | 02 | - | 01 | - | - | 03 |
| 27 | ஸ்லைட் புறஜெக்டர் | - | - | - | - | - | - |

# 05. அபிவிருத்தி நடவடிக்கைகள்

## 5.1. பிரதேசகாணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் திட்டங்களை அமுலாக்கல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதேச மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இச் செயற்திட்டத்தின் நோக்கம் நாட்டின் நிலவளத்தை வளங்குண்றாமல் பயன்படுத்த வழிகாட்டுதலாகும். எவ்வாறாயினும் பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள நிலங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே பயன்பாட்டி லிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் தற்போதுள்ள நிலப்பயன்பாட்டை மேம்படுத்தவும் பாதுகாக்க வேண்டிய பகுதிகளை பேணுவதங்கும் உதவும்.

2015ம் ஆண்டில் 202 திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டடுள்ளது. பிரதேச மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த 53 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**பிரதேச மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக விழிப்புணர்வுக்கூட்டம்- 2015**

**மாத்தறை மாவட்டம்**





## 5.2. மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு (மா.கா.ப.தி.கு)

இலங்கையின் காணிப்பயன்பாட்டினை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான கொள்கை களை வகுக்கவும் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் வெள;வேறான தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதற்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் / நிறுவனங்களின் கூட்டான அணுகுமுறை மற்றும் பிரதிநிதித்துவம் தேவையாகும்.

1. தேசிய மட்டம் - தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயற்குழு
2. மாவட்ட மட்டம் - மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு
3. பிரதேச மட்டம் - பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு
4. கிராம மட்டம் - கிராம காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இக் குழுவின் தலைவராக மாவட்ட செயலாளர் /அரசஅதிபரும், செயலாளராக உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு)ம் செயலாற்றுவார்கள். இக்குழுவின் ஒருங்கிணைப்பு மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத்தினால் செய்யப்படுகிறது. இக்குழு வழமையாக மூண்று மாதத்திற்கொரு முறை கூட்டப்படும். ஆயினும் தேவையாயின் அரச அதிபரால் மேலதிகமாக குழுகூட்டம் கூட்டப்படலாம்.
குழுவினால் தீர்மானம் எடுப்பதற்கு சிக்கலான பிரச்சனையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பிரச்சனைபற்றி விசேட ஆய்வினை மேற்கொள்ள அரச அதிபரால் குழு அங்கத்தவர்களைக் கொண்ட உபகுழு அமைக்கப்படலாம்.

**மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் (மா.கா.ப.தி.கு) செயல் பங்கு**

1. பயன்படுத்தப்படாத காணிகளை இனங்காணுதல், அவற்றை அறிவித்தல்
2. மாவட்டத்தில காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் துறையில் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னுரிமையை நிர்ணயித்தல்.
3. நகர மற்றும் கிராமிய துறைகளில் எதிர்கால அபிவிருத்திக்கான இடங்களை இனங்காணுதல்.
4. மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளுக்;கான இடங்களை இனங்காணுதலும் அவற்றை விடுவிப்பதற்கு பரிந்துரை செய்தலும்.

மேற்குறிப்பிடப்பட்ட முக்கிய செயற்பாடுகளிற்கு மேலதிகமான மா.கா.ப.தி.குவின் செயற்பாடுகள்

1. மாவட்டத்திலுள்ள பிரதான காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளைப்பற்றி தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் முழுவிற்கு தெரிவித்தல்.
2. பிரதேச மற்றும் கிராமியமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கு வழிகாட்டலை வழங்கல்
3. மாவட்ட மட்டத்தில் காணிப் பயன்பாடு தயாரிப்பதற்கான தரவுகளை உருவாக்க உதவுதலும் வழிகாட்டலும்.
4. காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் அமுல்ப்படுத்தலை கண்காணித்தல்.
5. வெவ்வேறு நிறுவனங்களி**ன்** காணிப் பயன்பாட்டு செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
6. பிரதேச மாவட்டத்தில்களின் பரிந்துரைகளைப்பற்றி கலந்துரையாடி முடிவுசெய்தல.;

## 2015ல் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு





**மன்னார் மாவட்டம்**
**கிளிநொச்சி மாவட்டம்**

**மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் அமைப்பு**

1. மாவட்ட செயலாளார்/அரச அதிபர் - தலைவர்
2. பிரதேச செயளாளர்கள்
3. உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) - செயலாளர்
4. மாகாண காணி ஆணையாளர் / உதவி காணி ஆணையாளர்
5. பிரதிப் பணிப்பாளர் (விவசாய விரிவாக்கம்)
6. மாவட்ட வன உத்தியோகத்தர்
7. நிலஅளவை கண்காணிப்பாளர்
8. உதவி ஆணையாளர் - கமத்தொழில் சேவைகள்
9. பிரதிப் பணிப்பாளர் - நீர்ப்பாசனம்
10. உதவி காணி ஆணையாளர் -உள்ளூராட்சி

11. உதவிப் பணிப்பாளர் - ஏற்றுமதிப் பயிர்கள்
12. முகாமையாளர் - தேயிலை சிறு தோட்ட சொந்தக்காரர் அதிகாரசபை
13. பிரதிப் பணிப்பாளர் - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
14. பிரதேச முகாமையாளர் - தெங்குப் பயிர்ச்செய்கை சபை
15. உதவிப் பணிப்பாளர் - மத்திய சுற்றாடல் அதிகாரசபை

தேவை ஏற்படின் அரசஅதிபரினால் ஏனைய திணைக்களங்கள்/ நிறுவனங்களிலிருந்து மேலதிமாக அங்கத்தவர்களை நியமிக்கலாம்

2015ம் ஆண்டில் 90 மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கூட்டம் நடாத்த இலக்காக கொள்ளப்பட்டபோதிலும் 88 குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. ஓவ்வொரு குழுக்கூட்டத்திற்கும் ரூபா.3000/= ஒதுக்கப்பட்டது.

## 5.3. பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு (பி.கா.ப.தி.கு)

அந்தந்த மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் வழிகாட்டலில் பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு செயற்படுகிறது. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் நடவடிக்கைகள் பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும். பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற்; குழுவின் தலைவராக பிரதேச செயலாளாரும், செயலாளராகவும், குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரும் செயலாற்றுவார்கள்.

**பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் செயல் பங்கு**

1. பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலுக்கு உதவுதல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகள்
2. காணிப் பயன்படுத்தலில் முன்னுரிமையான காணிகளை இனங்காணுதல்.
3. காணிப்பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளை இனங்காணுதல், அவற்றிற்கான பரிந்துரைகளைச் செய்தல் தேவையாயின் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் முழுவிற்கு முன்வைத்தல்.
4. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பரிந்துரைகளின் அடிப்படையில் குறுகியகால மற்றும் நீண்டகால செயற்திட்டங்களை தயாரித்தல். இத்திட்டம் பிரதேசமட்ட வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.
5. தேவையானபோது மாவட்ட மற்றும் தேசிய மட்ட குழுவிற்கு பரிந்துரைகளை வழங்குதல்
6. காணி பராதீனப்படுத்தலுக்கு பரிந்துரைகளை வழங்குதல்
7. காணி கையகப்படுத்தலுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.
8. கிராம மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு வழிகாட்டல்

9. எதிர்கால அபிவிருத்திக்காக பிரதேசத்திலுள்ள காணிகளை இனங்காணுதல்.
10. பல்வேறு பாவனைகளுக்கும் காணிகளை ஒதக்கீடு செய்யும்போது காணிப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல்
11. பிரதேசமட்டத்தில் காணிப் பயன்பாடு பற்றிய தரவுகளை உருவாக்கல், அதனை மாவட்ட மாவட்ட தரவு அடிப்படையுடன் இணைத்தல்

**பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் அமைப்பு**

1. பிரதேச செயலாளார் - தலைவர்
2. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் - செயலாளர்
3. காணி உத்தியோகத்தர் / குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர்
4. விவசாயப் போதனாசிரியர்
5. பெரும்பாக உத்தியோகத்தர் - கமத்தொழில் சேவைகள்
6. வன உத்தியோகத்தர்
7. உதவி நிலஅளவை உதவி கண்காணிப்பாளர்
8. விரிவாக்க உத்தியோகத்தர் (தேயிலை/தென்னை/இறப்பர்)
9. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்
10. சுற்றாடல் உத்தியோகத்தர்
11. விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி.
12. பெருந்தோட்ட துறையில் பிரதிநிதி
13 சம்பந்தப்பட்ட அரச முகவர் அமைப்புகளின் பிரதிநிதி

2015ம் ஆண்டில் 300 பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கூட்டம் நடாத்த இலக்காக கொள்ளப்பட்டபோதிலும் 335 குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. ஓவ்வொரு குழுக்கூட்டத் திற்கும் ரூபா.1500/= ஒதுக்கப்பட்டது. சில பிரதேச செயலகங்களில் இக்கூட்டம் பிரதேச விவசாய குழுக்கூட்டத்துடன் இணைத்து நடாத்தப்பட்டது. ஆகையினால் மொத்த ஒதுக்கீடும் பயன்படுத்தப்படவில்லை.

**2015ம் ஆண்டில் நடைபெற்ற பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கூட்டம்**

**கம்பஹா மாவட்டம்**



**பிரதேச செயலக பிரிவு - களனி**

**பொலநறுவை மாவட்டம்**



**பிரதேச செயலக பிரிவு - வெலிகந்தை**

## 5.4 தேசியகாணிப் பயன்பாடுபற்றிய ஆய்வு

இலங்கையில் இற்றைப்படுத்தப்பட்ட காணிப்பயன்பாடு பற்றிய தகவல்கள் இல்லாதிருப்பது காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலிற்கு அடிப்படை பிரச்சனையாகும். ஆகையால் கா.ப.கொ.தி.தி இனால் விஷேட செயற்பாடாக காணிப்பயன்பாடு இற்றைப் படுத்தல் பொதுவான வழிகாட்டலுக்கமைய நாடுமுழுவதற்கும் செய்யப்படுகிறது. இற்றைப்படுத்தப்பட்ட காணிப்பயன்பாடு பற்றிய தகவல்கள் இல்லாதிருப்பது திணைக்களங்கள், நிறுவனங்கள், அரச அதிபர், பிரதேச செயளாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையாகும். இத்திட்டத்தின் ஊடாக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வுகாணவும் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயற்பாடுகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய காணிப்பயன்பாடு பற்றிய ஆய்வு இத்திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் முடிவுகள் அரச அதிபருக்கும், (மாவட்ட செயலாளர்), பிரதேச செயலாளருக்கும், மற்றும் ஏனைய நிறவனங்களுக்கும் இற்றைப்படுத்தப்பட்ட காணிப் பயன்பாடு பற்றிய தகவல்களை பெறுவதற்கு உதவியாக இருக்கும். எதிர்காலத்தில் ஒவ்வொரு ஐந்து வருடத்திலும் இற்றைப்படுத்தப்படும்.
இவ்வேலைத்திட்டம் 2015ம் ஆண்டு இறுதியில் 1:10,000 அளவுத்திட்ட 787 வரைபடதாள்கள் இற்றைப்படுத்தப்பட்டது.

## 5.5 நீர்மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களைப் அடையாளங்காணல்

நிலவள முகாமைத்துவத்தில் நீர்ப்பாதுகாப்பிற்கும் நிலவளப் பாதுகாப்பிற்கும் பலமான தொடர்புள்ளது. முக்கியபங்கினை வகிக்கிறது. நாட்டின் இயற்கைவள முகாமைத்துவத்தில் நீர்வளங்களை பாதுகாத்தலும் பேணுதலும் மற்றும் நீர்வளங்கள் மாசுபடுதலை தடுத்தல் ஆகியன முக்கியமானதாகும். இது நிலம்பற்றிய பாராளுமண்ற ஆலோசனைக் குழுவின் வழிநடத்தலில் அனைத்துவகையான நீர்மூலங்களையும் அவற்றின் ஒதுக்கப்பட்ட இடங்களையும் பாதுகாத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான தேசிய கொள்கை வரையப்பட்டு அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டது. இக்கொள்கை கடந்த ஆண்டு 22.12.2014 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இல.1894/3 மூலம் வெளியிடப்பட்டது.

நீர்வளங்களின் அமைவிடங்கள் 18 மாவட்டங்களில் அடையாளங்காணப்பட்டு அவற்றின் விபரங்களடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு மா.கா.ப.தி.கு வினால் சரிபார்ப்பதற்காக மாவட்டச் செயலாளர்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட வேண்டிய நீர்வளங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேசிய சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக பிரகடனப் படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு இத்தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இக்கொள்கையை அமுல்ப்படுத்துவதற்காக கொள்கையை தயாரிப்பதில் பங்களித்த நிறுவனங்களின் பங்குபற்றலுடன் 2015 நவம்பர் 14ம் திகதி பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. சில நிறுவனங்கள் செயற்திட்டம் தயாரித்து 2015 ம் ஆண்டு இறுதியில் சமர்ப்பித்துள்ளது.

இக்கொள்கையினை அமுல்படுத்துவதன் மூலம் ஆறுகள் மற்றும் நீரோடைகளின் ஒதுக்கப்பட்ட இடங்களையும் அடையாள்கண்டு வரைபடம் வரையப்பட்டு அவற்றினை பாதுகாக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5.6 வீடமைப்புக்கு பொருத்தமான இடங்களை அடையாளங்காணல்

அரசாங்கத்தின் நூறு நாள் திட்டத்தில் வீடில்லாத குடும்பங்களுக்கு வீடு வழங்கும் திட்டம் முன்னுரிமை செயற்திட்டமாக அடையாளங்காணப்பட்டது. இந்நோக்கத்தை அடைவதற்கு பொருத்தமான இடங்கள் இருப்பதை அடையாளங்காணப்படல் முக்கியமாகும். பௌதீக காரணிகள் மற்றும் அமைவிடம் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகள் பரிசீலிக்கப்பட்டு வீடமைப்பிற்கு மிகப்பொருத்தமான இடங்கள் அடையாளங் காணல் முக்கியமாகும். செங்குத்தான சரிவுள்ள பகுதிகள் மற்றும் சூழல் பாதிப்பேற்படும் இடங்கள் நீக்கப்பட்டு பொருத்தமான இடங்கள் அடையாளங் காணப்பட்டது.

2015ம் ஆண்டு இறுதியில் 24 மாவட்டங்களுக்கு அறிக்கைகள் தயரிக்கப்பட்டு காணி அமைச்சு மற்றும் சமுர்த்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டது.

## 5.7 கிராமமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை அமுலாக்கம்

கிராமசேவையாளர் பிரிவுகளில் காணப்படும் காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராமம் / கிராமங்கள் கிராமமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறையினை அமுல்ப்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்படும். அத்துடன் மேற்கூறப்பட்ட கருதுகோளைவிட நிலத்தை பயன்படுத்துவோரின் ஈடுபாட்டையும் கருத்திற்கொண்டு கிராமம் தெரிவு செய்யப்பட்டது. இச்செயல்முறை சம்பந்தப்பட்ட தகவல்களை சேகரித்தல் மற்றும் கிராமத்திற்கான திட்ட முன்மொழிவை தயாரித்தல் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கப்படும். இத்திட்ட முன்மொழிவை காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரினால் உருவாக்கப்பட்டு மாவட்ட அலுவலகத்தினூடாக தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும். திட்டம் அனுமதிக்கப்பட்டபின் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு)ன் மேற்பார்வையில் அமுல்ப்படுத்தப்படும். 2015ம் ஆண்டில் 25 கிராமங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டபோதிலும் 30 செயல்முறைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. 2015ல் ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூபா 200,000/= ஒதுக்கப்பட்டது.

**2015 இல் அமுலாக்கப்பட்ட கிராமமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் மாதிரி**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**





**gpuNjr nrayf gpupT – ngypaj;j**




**gpuNjr nrayf gpupT – fsdp**

## 5.8 காணித்துண்டு மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை விளக்கம்

இத்திட்டம் பாடசாலை பிள்ளைகள், பொதுசன ஊழியர்கள் உள்ளடங்கலாக சமூகத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஏனைய திட்டங்களைவிட அதிகம் பிரசித்தமானது. இத்திட்டத்தின் நோக்கம் சிறிய காணித்துண்டொன்றினை உற்பத்தி முறையில் திறனுள்ளவாறு எவ்வாறு பயன்படுத்துவதுபற்றி விழிப்புணர்வு ஏற்படுத்து வதும் திறமை மற்றும் அறிவை வழங்குவதாகும். பாடசாலைகள், மாவட்ட செயலகங்கள் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் உள்ள மட்டுப்படுத்தபபட்ட அளவிலுள்ள காணிகள் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன. இந்நாட்களில் விவசாய நடவடிக்கைகளை நோக்கி இத்திட்டத்தில் மக்கள் பங்குபற்றலை ஊக்கப்படுத்துவதாக இருக்கிறது. மேலும் இது நச்சுப்பதார்த்தமற்ற மரக்கறிகளை வழங்குகிறது. 2015ம் ஆண்டில் 25 செயல்முறை விளக்கங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டபோதிலும் 45 செயல்முறைகள் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டது. ஓவ்வொரு செயல்முறை விளக்கத்திற்கும் ரூபா 50,000/= ஒதுக்கப்பட்டது.

**2015இல் காணித்துண்டு மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை விளக்கம்**

**கம்பஹா மாவட்டம்**



**பிரதேச செயலக பிரிவு – அத்தனகலை**

**கொழும்பு மாவட்டம்**



**பிரதேச செயலக பிரிவு - மொரட்டுவ**

## 5.9 தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம்

சரியாக பராமரிக்கப்படாத எந்தவொரு நிலமும் தரமிழந்துபோகலாம். மோசமான பராமரிப்பிலுள்ள விவசாய காணிகளும் தரமிழந்துபோகும். ஆகையால் இத்திட்டத்தின்கீழ் தரமிழந்த விவசாயக் காணிகளை அபிவிருத்தி செய்வதற்கான உபாயங்கள் அறிமுகப் படுத்தப்படும். செயற்திட்டத்தின் முதலாவது நிலையை அமுல்ப்படுத்தம்போது தரமிழந்த காணிகள் இனங்காணப்பட்டன. 2015ம் ஆண்டில் 25 தரமிழந்த காணிகளை புனரமைப்பதற் கான திட்டம் இலக்காகக் கொள்ளப்பட்டதில் 24 திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. 2015ல் ஓவ்வொரு திட்டத்திற்கும் ரூபா 75,000/= ஒதுக்கப்பட்டது.

**2015ல் அமுலப்படுத்தப்பட்ட தரமிழந்த காணிகள் புனரமைப்பு**

**கம்பஹா மாவட்டம்**









**பிரதேச செயலக பிரிவு – தொம்பே**

## 5.10. பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வுத் கூட்டம் நடாத்தல்

இத்திட்டத்தின் நோக்கம் நிலவளத்தை எதிர்கால சந்ததியினருக்காக வளங்குன்றாமல் பயன்படுத்தல்பற்றி பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதலாகும். காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் விடயம் உயர்தர புவியியல் பாடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் இத்திட்டம்பாடசாலை பிள்ளைகளுக்கு மிகவும் பொருத்தமானதும், பயனுள்ளதுமாகும். 2015ம் ஆண்டில் 220 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்த இலக்காகக் கொள்ளப்பட்டபோதிலும் 266 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு செயல்முறை விளக்கத்திற்கும் ரூபா 3,000/= ஒதுக்கப்பட்டது.

**பாடசாலை பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வு கூட்டங்கள்- 2015**

**கம்பஹா மாவட்டம்**





சாந்தா பிரான்சிஸ் மகா வித்தியாலயம்

**அம்பாந்தோட்டை மாவட்டம்**





**பிரதேச செயலக பிரிவு – கட்டுவன**

## 5.11. விசேட திட்டங்கள்

மாவட்டம், பிரதேசம், கிராமம் ஆகிய எந்த மட்டத்திலும் குறிப்பிட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரச்சனைகளை வெளிப்பபடுத்துவதற்காக விசேட ஆய்வுகள் மேறகொள்ளப் பட்டது. விசேட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள் தலைமை அலுவலகத்தினால் அனுமதிக்கப்படுகிறது. 2015ம் ஆண்டில் 25 முன்மொழிவுகள் அனுமதிக்கப்பட்டதுடன் அவற்றில் 08 ஆய்வுகள் செய்யப்பட்டது. இவ் 08 ஆய்வுகளிற்கும் மொத்தமாக ரூபா.274952/= ஒதுக்கப்பட்டது.

## 5.12 காணிப்பயன்பாட்டு தகவல் முறைமையை பராமரித்தல்

இத்திட்டத்தின்கீழ் காணித்தரவு வங்கி ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்படகிறது. தரவுகள் பிரதேச மட்டத்தில் இற்றைப்படுத்தப்படுகிறது. இற்றைப்படுத்தப்படுத்தப்பட்ட தரவுகள் மூண்று மாதத்திற்கு ஒருமுறை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அவை தலைமை அலுவலகத்தில் இற்றைப் படுத்தப்படுகிறது.

காணிப்பயன்பாட்டு தகவல் முறைமையை பராமரித்தலின் நோக்கம்

1. பயன்படுத்தப்படாத அரச காணிகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட சரியான தரவு அடிப்படையை ஸ்தாபித்தல்.
2. ஒழுங்கான முறையில் பயன்படுத்த பயன்படுத்தப்படாத அரச காணிகள் பற்றிய தகவல்களை வழங்கல்.
3. வகைப்படுத்தல் மூலம் பொருத்தமான பயன்பாட்டை பரிந்துரை செய்தல் மற்றும் பயன்படுத்தப்படாத காணிகளுக்கு பொருத்தமான பயிரை பரிந்துரைத்தல்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த பயன்படுத்தப்படாத அரச காணிகள் பற்றிய தகவல்களை பெறுவதற்கு முறையியல் ஒன்றை விருத்தி செய்தல்.

## 5.13 ஏனைய திட்டங்கள்

(i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் காணிப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதல்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (கபாநஆ) பரிந்துரையின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கு மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதலுக்கான வேலைகள் தேசிய மட்ட நிபுணர் குழுவின் வழிகாட்டலுடன் மாவட்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. திட்டமிடல் நடவடிக்கைகள் 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பந்தி 9.152ல் பரிந்துரைக்கப் பட்டவாறு வடக்கு மற்றும் கிழக்கின் 08 மாவட்டங்களிற்கும் காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்;படுகிறது. தற்போதயதும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் பன்மைத்துவம், நிலையான பொருளாதார அபிவிருத்தி, ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு தரங்கள், மத, கலாச்சார மற்றும் தொல்லியல் புராதனத் தலங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் முகமாக காணிப்பாதுகாப்பு மற்றும் பராதீனப்படுத்தலில் மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டுவதற்காக இத்திட்டம் உருவாக்கப்படுகிறது.

திட்டமிடல் செயற்பாடுகளில் வெளிக்கள வேலைகள் 2015ல் நிறைவு செய்யப் பட்டுள்ளது. வெளிக்கள வேலையின்போது அடையாளங்காணப்பட்ட காணிப் பயன்பாட்டு பிரச்சனைகளுக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக பிரதேச மட்டத்திலுள்ள பங்காளர்களுடன் கலந்துரையாடப்பட்டது. பிரதேச மட்டத்திலான கலந்துரையாடல் மற்றும் மாவட்ட நிபுணர்கள் குழுவுடனான கலந்துரையாடல் கள் நிறைவுபெற்றுள்ளது. 08 மாவட்டங்களிற்கும் காணிப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்கும் வேலைகள் 2016 ஆண்டு முதல் காலாண்டுப்பகுதியில் பூர்த்தி செய்யப்படும்.

**திருகோணமலை மாவட்டம்** **முல்லைத்தீவு மாவட்டம்**





**பி.செ.பிரிவு – மொறவெவ** **பி.செ.பிரிவு – கரைத்துறைப்பற்று**





**மாவட்ட நிபுணர்கள் குழுவுடனான கூட்டம் – யாழ்பாண மாவட்டம்**

(ii) **பெருந்தோட்ட பயிர்ச்செய்கைபண்ணும் காணிகள் வரைபடம் உருவாக்கல்.**

களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, இரத்தினபுரி, நுவதரலியா மாவட்டங்களில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைபண்ணும் காணிகள் வரைபடம் உருவாக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. 2015ம் ஆண்டு இறுதியில் காணிப்பயன்பாட்டு வரைபடம் உருவாக்கும் வேலைகள் மேற்கூறப்பட்ட மாவட்டங்களில் 90 % பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

(iii) **2015ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட திட்டங்கள்**

- நிலம் தரமிழப்பதை குறைப்பதற்காக பத்து வருட தேசிய செயற்திட்டதை (2015 - 2024) தயாரிப்பதற்கு பங்களிப்பு செய்யப்பட்டது.
- ஜனாதிபதியின் சிந்தனையில் உருவான “வனரோபா” தேசிய மரநடுகைத் திட்டத்தில் மரநடுகையை 18 மாவட்டங்களில் அமுல்ப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.14. வருடாந்த செயற்திட்டம் பற்றிய கருத்தரங்கு

2015ம் ஆண்டின் வருடாந்த செயற்திட்டம் பற்றிய கருத்தரங்கு திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் பொல்கொல்லையில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. செயற்திட்டம் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் மேலும் விடயம் சார்பான அறிவை விருத்தி செய்வதற்காக கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. 2014ம் ஆண்டில் வெற்றிகரமாக செய்துமுடிக்கப்பட்ட திட்டங்களுக்கு சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் பாராட்டப்பட்டார்கள்.





## 5.15. மாவட்ட மட்டத்தில் திட்டங்களின் முன்னேற்றம்

மாவட்டங்களில் அமுல்ப்படத்தப்பட்ட திட்டங்களின் முன்னெற்றம்பற்றிய சுருக்கம் கீழே அட்டவணையிலும், வரைபடத்திலும் தரப்பட்டுள்ளது

**மாவட்டங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னெற்றம்பற்றிய சுருக்கம் - 2015**

| திட்டம் | இலக்கு | முன்னெற்றம் |
|---|---|---|
| மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள் | 90 | 80 |
| பிரதேச காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள் | 300 | 335 |
| கிராமமட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டம் | 25 | 30 |
| காணித்துண்டு மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களின் செய்முறைக்காட்சிகள் | 25 | 45 |
| தரமிழந்த நிலங்களுக்கு புனரமைக்கும் திட்டங்கள் | 25 | 24 |
| பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 200 | 226 |
| விஷேட திட்டங்கள் | 25 | 08 |

**அபிவிருத்தித் திட்டங்களின் முன்னெற்றம்பற்றிய சுருக்கம் -2015**

